Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 48 | உள்ளூர் - 17.02.2026 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 54 | * Issue 48 | வெளியூர் - 18.02.2026 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


சூரிய கிரகணத்தன்று உண்டாகும் 4 ராஜயோகங்கள்

எஸ்.பி.ஐ. 2050 காலியிடங்கள்

அச்சம் இல்லை.. அச்சம் இல்லை.. - மாணிக்கம் தாகூர்!

ராஷ்மிகா -விஜய் தேவரகொண்டா திருமணம்?

## தமிழ்நாடு அரசின் 2026-2027-ம் ஆண்டுக்கான

# இடைக்கால பட்ஜெட் /வேளாண்மைதுறை பட்ஜெட் தாக்கல்

## துறை வாரியான நிதி ஒதுக்கீடு



சென்னை, பிப். 17–

தமிழக இடைக்கால பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டசபையில் இன்று (பிப்ரவரி 17) தாக்கல் செய்தார்.

தமிழக சட்டசபை தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் நடக்கவுள்ளது. இதை முன்னிட்டு இந்தாண்டுக்கான இடைக்கால பட்ஜெட் இன்று சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது. நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசியதாவது:

வறுமையை ஒழிக்கும் போரை நாம் துவங்கி உள்ளோம். கடைக்கோடி தமிழரும் மாநிலத்தின் வளர்ச்சி பயணத்தில் பங்கு பெறும் சூழலை உருவாக்கி உள்ளோம். தமிழகத்தின் வளர்ச்சி முதல்வர் ஸ்டாலினால் வழி நடத்தப்படுகிறது. நாட்டிற்கே வழிகாட்டும் கடமையினை மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்படுத்தி வருகிறோம்.

ஏஐ உள்ளிட்ட துறைகளில் இளைஞர்கள் வளர திட்டங்கள் தீட்டப்படும். உணவு உற்பத்தியில் தமிழகம் வரலாறு காணாத வளர்ச்சி பெற்றுள்ளது. இந்தியாவின் 2வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழகம் உள்ளது. தமிழர் பெருமையை பறைசாற்றும் வகையில் பல்வேறு அருங்காட்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**நாடே திரும்பி பார்த்தது!**

ஐக்கிய நாடு சபை அங்கீகரித்த மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்க்கும் பணிகள் நடை பெற்று வருகிறது; பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழை பாதுகாக்க தமிழக அரசு முனைப்புடன் செயல்படு கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் 1 கோடியே 31 லட்சம் பேருக்கு ஒரே நேரத்தில் ரூ. 5 ஆயிரம் வீதம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட போது இந்த நாடே திரும்பி பார்த்தது. பெண்கள் மகிழ்ச்சியில் திகைத்தனர். இதற்கு கோடானு கோடி பெண்களின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**புதிய வீடுகள்**

சோழர் அருங்காட்சியகம், நவாய் அருங்காட்சியகம், நொய்யல் அருங்காட்சியகம் என மொத்தம் ரூ.285 கோடியில் அருங்காட்சியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. உலகத் தரத்தில் கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டு பெரிய வரவேற்பை பெற்றுள்ளன. தமிழகத்தில் 10,649 புதிய வீடுகள் கட்டித் தரப்படும்.

**சவால்களை மீறி....**

மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை உள்ளிட்ட சவால்களை மீறியும் தமிழகம் வளர்ந்து வருகிறது. தமிழகம் இரட்டை இலக்கு பொருளாதார வளர்ச்சியை அடைய பல்வேறு நல்ல திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக நிதி வழங்கப்பட்டுள்ளது.

விடியல் பேருந்து திட்டத்தில் 888 கோடி முறை மகளிர் பயணம் செய்து பயனடைந்துள்ளனர். 6 லட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.40 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 19 தோழி விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மகளிர் நலன் காக்கும் இத்தகைய திட்டங்களை பல மாநிலங்கள் பின்பற்ற தொடங்கி உள்ளன. மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு விகிதம் தேசிய சாராசரியை விட தமிழகத்தில் குறைவாக உள்ளது.

**41 சதவீதம்**

நாடு முழுவதும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீத பெண்கள் தமிழகத்தில் பணிபுரிகின்றனர். முதல்வரின் காலை உணவு திட்டத்தால் மாணவர்கள் வருகை அதிகரித்துள்ளது. 19.34 லட்சம் பேர் பயன் பெறும் இந்தத் திட்டத்திற்கு ரூ.1889 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

10,637 குழந்தைகள் அன்புக் கரங்கள் திட்டம் மூலம் பயனடைந்துள்ளனர். மூத்த குடிமக்களுக்கு 25 அன்பு சோலைகள் அமைக்கப்பட்டுள்ளன. திருநங்கைகள் சுயமாக தொழில் செய்ய இந்த அரசு மானியம் வழங்குகிறது. தாயுமானவர் திட்டத்தின் கீழ் 27 லட்சம் மூத்த குடிமக்கள் பயன் பெற்றுள்ளனர்.

**கப்பல் கட்டும் கொள்கை**

கப்பல் கட்டுமானம், கப்பல் இயந்திரங்கள் உற்பத்தி ஆகிய துறைகளில் முதலீடுகளை ஈர்க்க தமிழகம் கப்பல் கட்டும் கொள்கை விரைவில் வெளியிடப்படும். இதனால் கப்பல் கட்டுமா னத்திற்கான உலகளாவிய மையமாக தமிழகம் உருவெ டுக்கும். தூத்துக்குடியில் ரூ.5,200 கோடி மதிப்பில் புதிய கப்பல் கட்டும் தளம் கட்டப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் ஆட்சேபனையற்ற அரசு நிலங்களில் வசிப்போருக்கு ஒரு முறை சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தில் 77,800 இணையவழி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை தமிழர்களுக்கு 3 கட்டங்களாக ரூ.630 கோடியில் வீடுகள் கட்டித்தரப்படும். தமிழகத்தில் 10,649 புதிய வீடுகள் கட்டித் தரப்படும்.

**நவீன நூலகங்கள்**

நெல்லை, கோவை, திருச்சியில் ரூ.902 கோடியில் நவீன நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.48,534 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள், கணவரால் கைவிடப்பட்டோர், முதியோர் உதவித் தொகைக்காக ரூ.5,463 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் இதுவரை 5,40,511 மாணவர்கள் ரூ.1000 பெறுகின்றனர்.

புதுமைப்பெண் திட்டத்தில் 6,95,296 மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. கருணாநிதி கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கூடுதலாக ஒரு லட்சம் வீடுகள் கட்டி தரப்படும். தற்போது வரை 1.71 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டுள்ளன; 2030 ஆண்டுக்குள் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**புதிய சரணாலயங்கள்**

மக்கள் நல்வாழ்வு துறைக்கு ரூ.22,090 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.500 கோடி மதிப்பீட்டில் தமிழக செமிகண்டக்டர் இயக்கம் நடைமுறை ப்படுத்தப்படும். தரமணியில் மேம்பட்ட செமிகண்டக்டர் தொழில்நுட்ப மையம் அமைக்கப்படுகிறது. திருச்சி, மதுரை, ஓசூரில் ரூ.1,070 கோடியில் புதிய டைடல் பார்க் பூங்கா நிறுவப்பட்டும். வனவிலங்குகள் பாதுகாக்க 6 புதிய சரணாலயங்கள் அமைக்கப்படும். பூவிருந்தவல்லி – வடபழனி இடையே விரைவில் மெட்ரோ ரயில் இயக்கப்படும். இவ்வாறு தங்கம் தென்னரசு பேசினார்.

**துறை வாரியான நிதி ஒதுக்கீடு**

* 11.19 சதவீதம் என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்துள்ளது.
* உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (TAPS) செயல்படுத்த ரூ.11, 000 கோடி நிதி ஒதுக்கீடு.
* நகராட்சி நிர்வாகத்துறைக்கு இடைக்கால பட்ஜெட்டில் ரூ.28,227 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.6,045 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செயல்பட்டு வருகிறது.
* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.3,934 கோடி!
* நீர்வளத்துறை ரூ.10,076 கோடி
* மின்சாரத்துறை ரூ.18,091 கோடி
* போக்குவரத்துத்துறை ரூ.13,062 கோடி
* உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்திற்கு ரூ. 17,088 கோடி ஒதுக்கீடு.
* நெடுஞ்சாலைத்துறைக்கு ரூ.21,132 கோடி நிதி ஒதுக்கீடு.
* உணவு பாதுகாப்புத் துறைக்கு ரூ.17,068 கோடி ஒதுக்கீடு.
* சுற்றுலாத்துறைக்கு ரூ.1394 கோடி ஒதுக்கீடு.

பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.1,634 கோடி ஒதுக்கீடு.

* சென்னை விமான நிலையம் கிளாம்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் சுங்குவார் சத்திரம், கோயம்பேடு ஆவடி மெட்ரோ வ ழித் தடங்களுக்கு கொள்கை ரீதியான ஒப்புதல்.
* 5 ஆண்டுகளில் 38 லட்சம் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.3,397 கோடியில் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
* மதுரை மத்திய சிறையை வேறு இடத்திற்கு மாற்றி புதிய சிறை அமைக்க ரூ.229 கோடிக்கு ஒப்புதல்
* கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கூடுதலாக ஒரு லட்சம் வீடுகள் கட்டப்பட்டுகின்றன.
* தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டு துறைக்கு ரூ.1,996 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* கொரோனா பெருந்தொற்றை தி.மு.க. அரசு பேராற்றலுடன் சமாளித்தது.
* காவிரி, வைகை ஆறுகளில் கழிவுநீர் கலப்பதை தடுக்க கழிவுநீர் சுத்திகரிப்பு பூங்காக்கள் அமைக்க ரூ.374 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 2.55 கோடி பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.
* முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில் இதுவரை 6,374 கோடி ரூபாய் மக்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.
* புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை 79.17 லட்சம் பேருக்கு செய்யப்பட்ட சோதனையில் 1,929 நபர்களுக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
* மருத்துவத்துறைக்கு ரூ.22,090 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* 36 லட்சத்திற்கு அதிகமான வேலைவாய்ப்பு களை தமிழக அரசு உறுதி செய்துள்ளது.
* 12.3 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
* 40 புதிய அரசு தொழில் பயிற்சி நிலையம் அமைக்க ரூ.291 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* பட்டாசு தொழிலாளர்கள் உயிரிழந்தால் அவர்களின் குழந்தைகளுக்கு 18 வயது நிறைவடையும் வரை உதவித்தொகை தரப்படுகிறது.
* திருச்சி, மதுரை, ஓசூரில் ரூ.1070 கோடி மதிப்பீட்டில் புதிய டைடல் பூங்காக்கள் நிறுவப்பட்டுள்ளன.
* இளைஞர் நலன், விளையாட்டுத் துறைக்கு ரூ.718 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* தமிழ்நாட்டிற்கு பதக்கம் பெற்றுத் தந்த 5403 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.176 கோடி பரிசு வழங்கப்பட்டுள்ளது.
* 5 ஆண்டுகளில் முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டிகள் மூலம் ரூ.101 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
* 1.14 லட்சம் வீடுகள் ரூ.969 கோடி செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.
* கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 20,484 கி.மீ. சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.
* ஊரக வளர்ச்சித்துறைக்கு ரூ.28,687 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* கடந்த 5 ஆண்டுகளில் 87 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
* 40 ஆண்டுகளுக்கு மேலான கூட்டுக் குடிநீர் திட்டங்களை புதுப்பிக்க ரூ.809 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* நதிக்கரை மேம்பாட்டிற்காக ரூ.374 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* "19 முக்கிய கோயில்களில் ரூ.1770 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன"
* தமிழ்நாடு கோயில்களில் ரூ.8,100 கோடியில் திருப்பணிகள்
* 5 ஆண்டுகளில் ரூ.3,357 கோடியில் 246 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்.
* பால்வளம் பால் பண்ணைகள் ரூ. 758 கோடியில் நவீனமயமாக்கல்.
* கைத்தறி & துணிநூல் ரூ. 20 கோடியில் 10 புதிய கைத்தறிப் பூங்காக்கள்!
* நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் 1 வீட்டிற்கு மானியம் ரூ.2,10,000 2,21,212 வீடுகள் கட்டப்பட்டுள்ளன, பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்க ளுக்கு 58,211 வீடுகள் கட்டப் பட்டுள்ளன 53,227 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.






## ரூ.178 கோடியில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், விரைவில் வேளாண் காடுகள் கொள்கை: வேளாண் பட்ஜெட்டில் தகவல்!

சென்னை , பிப். 17–

தமிழ்நாடு இடைக்கால நிதிநிலை அறிக்கையை அமைச்சர் தங்கம் தென்னரசு 2:22 மணி நேரம் வசித்து முடித்தார். இதையடுத்து அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண் பட்ஜெட்டை தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். வேளாண் இடைக்கால பட்ஜெட் வாசிக்கப்படும் நிலையில், திமுக எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் பச்சை துண்டு அணிந்துள்ளனர். அதில் அவர் பேசியது..

*5 ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் 28 வேளாண் கருத்துக் கேட்பு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராமங்களில் வேளாண் வளர்ச்சி அடைய கலைஞர் வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 10,000 சிறுபாசன குளங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

*800 தரம் பிரிப்பு கூடங்களுடன் கூடிய உர கலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.178 கோடி செலவில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கோவையில் நம்மாழ்வார் வேளாண் ஆராய்ச்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 17.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 05-ம் தேதி

# ஒரே நிறுவனத்தில் பல ஆண்டுகள் வேலைபார்ப்பது புத்திசாலித்தனமா..? வேறு நிறுவனம் மாறுவது புத்திசாலித்தனமா..?



இன்றைய வேகமான கார்ப்பரேட் உலகில், ஒரு நிறுவனத்தில் பல ஆண்டுகள் தங்கி உழைப்பது என்பது புத்திசாலித்தனமான முடிவா அல்லது பொருளாதார இழப்பா என்ற விவாதம் பெரும் புயலை கிளப்பியுள்ளது. முந்தைய காலங்களில், ஒரே அலுவலகத்தில் 10 ஆண்டுகள் பணிபுரிவது ஒரு பெருமையாக கருதப்பட்டது. ஆனால், தற்போதைய இந்திய வேலைவாய்ப்பு சந்தையில், ஒரு நிறுவனத்திற்கு விசுவாசமாக இருப்பதை விட, அடிக்கடி வேலை மாறுபவர்களே அதிக லாபம் ஈட்டுகிறார்கள் என்ற கசப்பான உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இது பல ஆண்டுகளாக தங்களது உழைப்பை தந்த பழைய ஊழியர்களிடையே ஒருவிதமான ஏமாற்றத்தையும், மன உளைச்சலையும் உருவாக்கியுள்ளது.

ஒரு ஊழியர் நிறுவனத்திலேயே தொடரும்போது, அவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் ஊதிய உயர்வு என்பது 8 முதல் 10 சதவீதத்திற்குள்ளேயே முடங்கிவிடுகிறது. இது விலைவாசி உயர்விற்கு ஈடுகொடுக்கவே போதுமானதாக இருப்பதில்லை. ஆனால், அதே பதவிக்கு வெளியிலிருந்து ஒரு புதிய நபரை வேலைக்கு எடுக்கும்போது, சந்தை மதிப்பை காரணம் காட்டி அவருக்கு 20 முதல் 40 சதவீதம் வரை கூடுதல் சம்பளம் வழங்க நிறுவனங்கள் தயங்குவதில்லை. இதனால், தங்களுக்குக் கீழே வேலைக்குச் சேரும் ஜூனியர் ஊழியர்கள், தங்களை விட அதிக சம்பளம் வாங்குவதை நேரில் காணும் சீனியர் ஊழியர்கள், தங்களது விசுவாசம் கேலிக்குரியதாக மாற்றப்படுவதாக உணர்கிறார்கள்.

நிறுவனங்கள் ஏன் இப்படி செய்கின்றன என்பதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், பட்ஜெட் என்ற பெயரில் நிலவும் பாரபட்சமே முதன்மையானது. பழைய ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும்போது அந்த நிறுவனத்தின் உள்விதிமுறைகள் தடையாக இருப்பதாக கூறும் நிர்வாகம், புதிய திறமையாளர்களை ஈர்க்கும்போது மட்டும் தாராளமாக பணத்தை வாரி வழங்குகிறது. குறிப்பாக ஐடி, வங்கி மற்றும் டிஜிட்டல் துறைகளில் இந்த ஊதியப் பாகுபாடு மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசத்தில் இருக்கிறது. "நாங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருந்தோம், ஆனால் எங்களுக்குக் கிடைப்பது வெறும் கைதட்டல் மட்டுமே; புதியவர்களுக்கு கிடைப்பதோ பெரும் பணம்" என்பதே பல ஊழியர்களின் வேதனையாக இருக்கிறது.

இந்த சூழல் ஊழியர்களின் மனநிலையில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய இளைஞர்கள் வேலையை ஒரு வாழ்வாதாரமாக பார்ப்பதை விட, ஒரு முதலீடாகவே பார்க்கிறார்கள். ஒரு இடத்தில் வளர்ச்சி தேங்கும்போது, அடுத்த இடத்திற்கு தாவுவதே சரியான நிதி மேலாண்மை என்று அவர்கள் கருதுகிறார்கள். விசுவாசம் என்பது இரு தரப்பிலும் இருக்க வேண்டும்; நிறுவனம் ஊழியரின் உழைப்பிற்கு ஏற்ற சந்தை மதிப்பிலான ஊதியத்தை தரத் தவறும்போது, ஊழியர் தனது வளர்ச்சியை தேடி வெளியேறுவதில் தவறில்லை என்ற மனநிலை ஆழமாக வேரூன்றிவிட்டது. இறுதியில், "விசுவாசமாக இருப்பது எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறதா?" என்ற கேள்விதான் இன்று ஒவ்வொரு ஊழியரின் மனதிலும் ஓடிக்கொண்டிருக்கிறது.



பழனி அருகே கொழுமங்கொண்டான் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட சமத்துவ புரத்தில் பயனாளிகளுக்கு அமைச்சர் சக்கரபாணி ஆணைகளை வழங்கினார்.

# 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது பள்ளி கல்வித்துறை!

சென்னை, பிப். 17–

தமிழ்நாட்டில், அரசு நடத்தும், மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் லாகரதமிக் புக், கால்குலேட்டர், ஸ்கிரைப் நியமனத்தில் புது நடைமுறை உள்ளிட்ட மாற்றங்கள் அறிமுகம் செய்து பள்ளி கல்வித்துறை அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

முன்னதாக சென்னை, அண்ணாசாலை, தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலக முதல் தள அரங்கில் திங்கட்கிழமை ( 16.02.2026) நண்பகல் 12 மணியளவில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள், 2026 புதிய நடைமுறைகள் அமலுக்கு வர உள்ளதாக பள்ளிக் கல்வித்துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, மார்ச் / ஏப்ரல் 2026–இல் நடைபெறவுள்ள மேல்நிலை / இடைநிலை பொதுத் தேர்வு தொடர்பாக அனைத்து இணை இயக்குநர்கள் / துணை இயக்குநர்கள் / அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி/ இடைநிலை /தனியார் பள்ளிகள்) மற்றும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கான ஆய்வுக் கூட்டமும் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான கல்விசார் ஆய்வுக் கூட்டமும் நடைபெற்றது. அதில் கீழே வரும் முடிவுகள் எடுக்கப்பட்டு உள்ளன.



### மடக்கைப் புத்தகங்கள்

மேல்நிலைத் தேர்வில் இயற்பியல், வேதியியல் கணிதம், வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் பாடங்களில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு பெரிய எழுத்துக்களில் "A4" அளவிலான மடக்கைப் புத்தகங்கள் (Loga–rithmic books) 20,000 எண்ணிக்கையில் வழங்கப்படவுள்ளது.

### கால்குலேட்டர் வசதி

இவ்வாண்டு முதல் கணக்குப் பதிவியல் பாடத்திற்கும் தேர்வர்கள் "Ordinary Calcu–lator without Programming" கால்குலேட்டர் வழங்கப்பட்டுள்ளது. தேர்விற்கு வருகைபுரிந்த மாணாக்கர்களுக்கு வினாத் தாட்கள் வழங்கிய பின்னர். ஒவ்வொரு தேர்வறையிலும் மீதமுள்ள வினாத்தாட்களை தேர்வறைக் கண்காணிப்பாளர்களே மாணவர்கள் முன்னிலையில் உறையிலிட்டு சீலிடும் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்நடைமுறை காரணமாக, வினாத்தாட்களின் பாதுகாப்புத் தன்மை மேலும் பலப்படுத்தப்படுகிறது.

### ஸ்கிரைப் நியமனம்

"சொல்வதை எழுதுபவர்" சலுகையினைப் பயன்படுத்தும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்குவதற்கென 5 வினாத்தாட்கள் கொண்ட வினாத்தாள் உறை அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்நடைமுறை காரணமாக, வினாத்தாட்களின் மந்தணத்தன்மை மேலும் பலப்படுத்தப்படுகிறது. தேர்வுப் பணிகளில் ஆசிரியர்களை முழுமையாக ஈடுபடுத்தும் பொருட்டு, சொல்வதை எழுதுபவர் நியமனங்களில், B. Ed., / DIET/ கலைக் கல்லூரிகள்/ தொழில்நுட்பக் கல்லூரிகளில் இரண்டாமாண்டு பயிலும் மாணாக்கர்கள் மற்றும் இல்லம் தேடிக் கல்வி ஆசிரியர்களைத் தன்னார்வலர்களாக நியமிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மேலும், இம்மாணாக்கர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

### இருப்பிட முகவரி சரிபார்ப்பு

இவ்வாண்டு நேரடி தனித் தேர்வர்கள் இருப்பிட முகவரி உறுதி செய்யவும், சார்ந்த மாவட்டங்களில் விண்ணப்பித்தலை உறுதி செய்யவும் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டு விவரங்கள் பதிவேற்றம் செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது என்றும் பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

# சிபிஎஸ்இ 10, 12-ம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வுகள் இன்று முதல் தொடக்கம்..!

சென்னை, பிப். 17–

சிபிஎஸ்இ 10, 12–ம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வுகள் இன்று முதல் தொடக்கி உள்ளது. இந்த தேர்வினை 43.67 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் சிபிஎஸ்இ 10 மற்றும் 12ஆம் வகுப்பு வாரியத் தேர்வுகளை இந்தியாவைத் தொடர்ந்து வெளிநாடுகளும் சேர்த்து மொத்தம் 27 நாடுகளில் சுமார் 46 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர், இந்த ஆண்டு இந்தியாவில் மட்டும் 43.67 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர்.

நாடு முழுவதும் உள்ள சிபிஎஸ்இ பள்ளிகளில் பயிலும் +2 மாணவர்களுக்கு பொதுத்தேர்வு வரும் 17ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அதேபோன்று, 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் வரும் 17ஆம் தேதி தொடங்கி மார்ச் 9ஆம் தேதி நிறைவடையும் என முன்பே தேர்வுத்திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேர்வு தொடர்பாக முக்கிய அறிவிப்பை சிபிஎஸ்இ வாரியம் வெளியிட்டுள்ளது.


அதன்படி, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளுக்கான விடைத்தாள்களை இனி ஆன்லைன் முறையில் மதிப்பீடு செய்ய தீர்மானித்துள்ளதாக மத்திய இடைநிலை கல்வி வாரியம் (CBSE) அறிவித்துள்ளது. இந்த புதிய நடைமுறை மூலம் மதிப்பீட்டு செயல்முறையில் ஏற்படும் பிழைகள் குறைய வாய்ப்புள்ளதாகவும், ஆசிரியர்களின் பணிச்சுமை மற்றும் அலைச்சல் குறையும் என்றும் வாரியம் தெரி வித்துள்ளது.

இத்தகைய சூழலில், 12ஆம் வகுப்பு மாணவர்களின் விடைத்தாள்கள் ஆன்லைன் தளத்தில் பதிவேற்றம் செய்யப்படவுள்ளன. அதன் பின்னர் ஆசிரியர்கள் கணினி மூலம் அவற்றை மதிப்பீடு செய்து மதிப்பெண்களை பதிவுசெய்ய வேண்டியுள்ளது.

இந்த முறை நடைமுறைக்கு வரும் நிலையில், பள்ளிகளில் தேவையான கணினி மற்றும் இணைய வசதிகள் போதுமான அளவில் இருப்பதை உறுதி செய்யுமாறும் சிபிஎஸ்இ அறிவுறுத்தியுள்ளது.

அதே நேரத்தில், 10ஆம் வகுப்பு மாணவர்களின் விடைத்தாள்கள் வழக்கம் போல் ஆசிரியர்களால் கைப்பட மதிப்பீடு செய்யப்படும் என்றும் வாரியம் தெளிவுபடுத்தியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சிபிஎஸ்இ 10 மற்றும் 12ஆம் வகுப்பு வாரியத் தேர்வுகளை இந்தியாவைத் தொடர்ந்து வெளிநாடுகளும் சேர்த்து மொத்தம் 27 நாடுகளில் சுமார் 46 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# சூரிய கிரகணத்தன்று உண்டாகும் 4 ராஜயோகங்கள்!



வேத ஜோதிட கணிப்புகள் படி சூரிய கிரகணம் மற்றும் சந்திர கிரகணம் இரண்டும், முக்கியமான கிரக நிலை மாற்றங்களாக பார்க்கப்படுகின்றன. தனி நபரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டாக்கும் இந்த கிரகணங்கள், நடப்பு அண்டில் அடுத்தடுத்து வர இருக்கும் நிலையில், தற்போது (பிப்ரவரி 17, 2026) நடப்பு ஆண்டின் முதல் சூரிய கிரகணம் நிகழ இருக்கிறது. நெருப்பு வளைய வடிவில் நிகழ இருக்கும் இந்த சூரிய கிரகணம் ஆனது, அபூர்வமான ஒரு கிரக நிலை மாற்றமாக பார்க்கப்படுகிறது. சனி பகவானை அதிபதியாக கொண்ட கும்ப ராசியில் நிகழும் இந்த கிரகணமானது நான்கு வலி மையான ராஜயோகங்களை சந்திக்க இருக்கிறது.

ஆம், சூரியன் – புதன் சேர்க்கையில் புதாத்திய யோகம், செவ்வாய் மற்றும் சந்திரன் சேர்க்கையில் நிகழும் மகா லட்சுமி ராஜயோகம், லட்சுமி நாராயண யோகம் மற்றும் சுக்ராதித்ய யோகத்தின் சுப சேர்க்கையை சந்திக்கிறது. இதன் விளைவு அனைத்து ராசியினருக்கும் தனித்துவமான பலன்களை அளிக்கிறது. அதிலும் குறிப்பாக ரிஷபம், மிதுனம், சிம்மம், விருச்சிகம், மகரம் மற்றும் கும்பம் ஆகிய 6 ராசியினர் வாழ்க்கையில் மகத்தான மாற்றங்களை கொண்டு வரும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

### ரிஷபம் – தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும்!

ரிஷப ராசி கொண்டவர்களின் ஜாதகத்தில் 10–வது வீட்டில் தாக்கத்தை கொண்டு வரும் இந்த கிரகணம், தொழில் வாழ்கையில் வளர்ச்சி காணும் வாய்ப்புகளை கொண்டு வரும். நிலையான வெற்றி மற்றும் நீண்ட கால மாற்றத்திற்கு தேவையான வாய்ப்புகளையும் கொண்டு வரும். தொழில் துறை மாற்றத்தை விரும்பும் நபர்கள், தங்கள் பணியை மாற்ற விரும்பும் நபர்களுக்கும் சாதகமான ஒரு காலத்தை கொண்ட வரும்.

பணியிடத்தில் உங்கள் படைப்பாற்றலுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும், வெகுமதியும் கிடைக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு காணும் வாய்ப்பும்காணப்படுகிறது. சிறு தொழில் முனைவோர், தங்கள் பெற்றோர் மற்றும் உடன் பிறந்தவர்களின் ஆதரவுடன் தொழிலை அடுத்த கட்டத்திற்கு கொண்டுச் செல்லும் வாய்ப்பினை பெறுவார்கள். உங்கள் தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பினையும் பெறுவார்கள்.

### மிதுனம் – வருமானம் அதிகரிக்கும்!

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் ஒரு காலமாக இது பார்க்கப்படுகிறது. ஏற்கனவே கிடைக்கும் வருமானம் போதுமானதாக இருக்க, கூடுதல் வருமானத்தை கொண்டு வருவீர்கள். தொழில் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் முக்கிய முடிவுகள், உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும் – சவால்கள் நிறைந்த பணிகளையும் எடுத்து செய்ய அனுமதிக்கும.

உங்கள் வருமானத்தை பல மடங்கு அதிகரிக்கும் வாய்ப்புகளை கொண்டு வரும். குடும்ப வாழ்க்கையிலும் மன நிறைவான விஷயங்களை கொண்டு வரும் வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் மன அமைதி மேம்படும், நிம்மதியான இரவு உறக்கமும் கிடைக்கும். நிதி நிலையில் முன்னேற்றம் காணலாம், உங்கள் விருப்பமான வாகனத்தை வாங்கலாம்.

### சிம்மம் – வெற்றிகரமான பயணங்கள் மேற்கொள்வீர்கள்!

சூரியனை அதிபதியாக கொண்ட சிம்ம ராசியினர், தங்கள் தொழில் வளர்ச்சி தொடர்பாக பயணங்கள் பல மேற்கொள்ளும் ஒரு காலமாக இது பார்க்கப்படுகிறது. எதிர்பார்த்த தொழில் வாய்ப்புகள் வாய்ப்புகள் கிடைக்கும், எதிர்பார்த்த பணியில் அமரும் வாய்ப்பும் கிடைக்கும். சூழ்நிலை சாதகமாக இருக்க, எதிர்பார்த்த மாற்றங்களை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கொண்டு வரலாம். இருப்பினும், அதற்கான கடின உழைப்பினை நீங்கள் அளிப்பது அவசியம்.

கடினமாக உழைத்திடுங்கள், அதற்கான பலனை பெறுங்கள். எதிர்வரும் கிரகணத்தின் தாக்கம், முன்னர் செய்த முதலீடுகள் வழியே போதுமான வருமானத்தையும் கொண்டு வரும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்க, பல ஆண்டுகளாக முடிக்க முடியாமல் நிலுவையில் இருந்த பணிகளையும் முடிக்கும் வாய்ப்பு பெறுவீர்கள்.

### விருச்சிகம் – ஆரோக்கியம் மேம்படும்!

விருச்சிக ராசி கொண்டவர்களின் ஜாதகத்தில் 4–வது வீட்டில் தாக்கத்தை உண்டாக்கும் இந்த கிரகணம், உங்கள் உள்ளுணர்வின் வலிமையை அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கொண்டு வரும் வாய்ப்புகளை அளிக்கும். உறவில் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வழிகளையும், வாய்ப்புகளையும் அளிக்கும். உங்களுக்கு கிடைக்கும் இந்த வாய்ப்பினை சரியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எதிர்பார்த்த மாற்றத்தை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வர முயற்சி செய்யுங்கள். உங்கள் உடல் ஆரோக்கியத்துடன், மன ஆரோக்கியத்தை பாதுகாக்கும் விஷயங்களிலும் கவனம் செலுத்துவீர்கள். தொழில் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பேசுகையில், உங்கள் இலக்கை அடையும் வழிகளையும், யுக்திகளையும் கண்டறிவீர்கள்.

### மகரம் – கூடுதல் பொறுப்பு கிடைக்கலாம்!

மகர ராசியினருக்கு இந்த கிரகணம், தொழில் வாழ்க்கையில் ஏற்றத்தை கொண்டு வருகிறது. உங்கள் திறமைகள் முழுவதையும் வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும், உயர் பதவிகள் மற்றும் உங்கள் திறமைக்கான அங்கீகாரத்தை பெறும் வாய்ப்பும் கிடைக்கும். அலுவலக பணி மேற்கொண்டு வரும் நபர்கள், தங்கள் பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை பெறலாம்.

பன்னாட்டு நிறுவனத்தில் பணியாற்றி வரும் நபர்கள், ஆன்சைட் வாய்ப்பை பெறலாம். சுய தொழில் செய்து வரும் நபர்கள், தங்கள் தொழிலை விரிவுப்படுத்தும் நிதி உதவிகளை பெறுவார்கள். கடன் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வருவார்கள். பொருளாதார நிலையில் காணப்படும் மாற்றம் புதிய வாகனம், வீடு – மனை வாங்குவதன் வாய்ப்பை கொண்டு வருகிறது.

### கும்பம் – புதிய தொடக்கம்!

வரும் கிரகணம் ஆனது கும்ப ராசி கொண்டவர்களின் ஜாதகத்தில் லக்ன வீட்டில் தாக்கத்தை உண்டாக்கிறது. நிபுணர்கள் கூற்றுப்படி இந்த மாற்றம், புதிய தொடக்கத்திற்கான வாய்ப்புகளை கொண்டு வரும். நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும், தடைகள் விலகும், எதிர்பார்த்த வெற்றியை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வரும் வாய்ப்பும் கிடைக்கும்.

தொழில் வாழ்க்கையில் மட்டும் அல்ல உறவிலும் புதிய தொடக்கத்திற்கான வாய்ப்பு கிடைக்கும். ஆம், காதல் துணை இல்லா நபர்களுக்கு குணத்திற்கு ஏற்ற காதல் துணை அமைவார், காதல் உறவில் இருக்கும் நபர்கள் தங்கள் உறவை திருமணம் எனும் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வார்கள்.

# தமிழகத்தில் கே.சி.வேணுகோபால்!

சென்னை, பிப். 17–

கூட்டணி சர்ச்சைக்கிடையே தமிழகம் வந்தார் காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் சென்னை விமான நிலையத்தில் கே. சி.வேணுகோபாலை காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை வரவேற்றார்.

# பாஜக தெருமுனை பரப்புரை!

சென்னை, பிப். 17–

தமிழகம் முழுவதும் இன்று முதல் பிப்.28 வரை நகரங்கள், கிராமங்களில் தெருமுனை பரப்புரை மேற்கொள்கிறது பாஜக. 'நாளை நமதே தமிழ்நாடும் நமதே' என்ற தலைப்பில் 20,000க்கும் மேற்பட்ட இடங்களில் பாஜக தெருமுனை பரப்புரை செய்யவுள்ளது.

# யாரும் கூட்டணி தொடர்பான விவரங்களை பேசக்கூடாது - கிரிஷ் ஜோடங்கர்!

சென்னை, பிப். 17–

பேச்சுவார்த்தை நடத்த திமுகவின் அழைப்புக்காக காத்திருக்கிறோம்; கூட்டணி உள்பட அனைத்து விசயங்கள் குறித்தும் 5 பேர் கொண்ட கமிட்டி பேச்சுவார்த்தை நடத்தி அறிக்கையை கட்சி மேலிடத்திற்கு தெரிவிப்போம் கட்சி மேலிடம் முடிவு எடுக்கும். அதுவரை யாரும் கூட்டணி தொடர்பான விவரங்களை பேசக்கூடாது; கூட்டணியில் எந்தவித பிரச்னையும் இல்லை என்று தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஜோடங்கர் கூறியுள்ளார்.

# அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் நயினார் நாகேந்திரன் சந்திப்பு!

சென்னை, பிப். 17–

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசி வருகிறார். சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள இல்லத்தில் எடப்பாடி பழனிசாமியை நயினார் நாகேந்திரன் சந்தித்தார்.

பாஜக மாநில தலைவர் நயினார் நாகே ந்திரன், இணையமைச்சர் எல். முருகன் எடப்பாடியை சந்தித்துப் பேசி வருகின்றனர்.

# இடைக்கால பட்ஜெட்: 'காதுகுத்து விழா' அழைப்பிதழுடன் பேரவைக்கு வந்த அதிமுக உறுப்பினர்கள்!




சென்னை, பிப். 17–

தமிழக சட்டப்பேரவையில் இடைக்கால பட்ஜெட்டை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். இந்நிலையில், இந்த இடைக்கால பட்ஜெட் கூட்டத் தொடருக்கு 'காதுகுத்து விழா' அழைப்பிதழுடன் பேரவைக்கு வருகை தந்து கவனம் ஈர்த்தனர் அதிமுக உறுப்பினர்கள்.

# அச்சம் இல்லை.. அச்சம் இல்லை.. அச்சமென்பதில்லையே - மாணிக்கம் தாகூர்!




சென்னை, பிப். 17–

ஆட்சி அதிகாரத்தில் காங்கிரஸ் கட்சிக்கு பங்கு வழங்க வலியுறுத்தி வரும் மாணிக்கம் தாகூர், பாரதியார் பாடல் வரியை குறிப்பிட்டு சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

திமுகவை விமர்சித்த மாணிக்கம் தாகூர் மீது மல்லிகார்ஜுன் கார்கேவிடம் செல்வப்பெருந்தகை புகாரளித்ததாக தகவல் தெரிவித்துள்ளார்.

# தேர்தலுக்கான அறிவிப்பு மார்ச் 8 - 12-ம் தேதிக்குள் வெளியாகலாம்!

சென்னை, பிப். 17–

தமிழ்நாட்டில் ஏப்.11 ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறலாம் என பாஜக மூத்த தலைவர் சந்தோஷ் பேசியதாக தகவல். தேர்தலுக்கான அறிவிப்பு மார்ச் 8 – 12ம் தேதிக்குள் வெளியாகலாம் என சந்தோஷ் பேசி இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### உடலில் இந்த பிரச்சனை இருப்பவர்கள் மீனை தொடவே தொடாதீங்க..!! எச்சரிக்கை..!!



அசைவ உணவுகளில் மிக குறைவான பக்கவிளைவுகளை கொண்டதும், ஒமேகா–3 கொழுப்பு அமிலங்கள், புரதம் என ஊட்டச்சத்துக்களின் சுரங்கமாகவும் விளங்குவது மீன். உடல் ஆரோக்கியத்திற்குத் தொடர்ந்து மீன் சாப்பிடுவது நல்லது என்றாலும், சில வகை மீன்களில் உள்ள பாதரச (Mercury) அளவும், கடல் மாசுபாடுகளும் சில குறிப்பிட்ட நபர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றன. யாரெல்லாம் மீன் சாப்பிடும்போது கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் என்பது குறித்து மருத்துவர்கள் கூறும் தகவல்களை இந்தப் பதிவில் பார்க்கலாம்.

11 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பாதரச பாதிப்பிற்கு மிக எளிதாக ஆளாகின்றனர். அதிக பாதரசம் கொண்ட மீன்களை உண்பது குழந்தைகளின் நினைவாற்றலைப் பாதிப்பதோடு, அவர்களை மந்தமாகவும், சோம்பேறிகளாகவும் மாற்றக்கூடும். குழந்தைகளுக்குச் சால்மன், திலாப்பியா மற்றும் மத்தி (Sardine) போன்ற பாதுகாப்பான மீன்களை வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை (சுமார் 30–60 கிராம்) மட்டும் வழங்குவது சிறந்தது. குறிப்பாக, குழந்தைகளுக்கு மீன் கொடுக்கும்போது முட்கள் இல்லாமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

கர்ப்ப காலத்தில் சில வகை மீன்களில் உள்ள பாதரசம் நஞ்சுக்கொடி வழியாக கருவை சென்றடைந்து, குழந்தையின் மூளை வளர்ச்சியை பாதிக்கலாம். இதனால் கிங் கானாங்கெளுத்தி, சுறா, வாள்மீன் போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. அதேபோல், பாலூட்டும் தாய்மார்கள் உண்ணும் மீனில் பாதரசம் இருந்தால், அது தாய்ப்பால் வழியாக குழந்தையின் நரம்பு மண்டலத்தைச் சிதைக்கக்கூடும். இவர்கள் சால்மன், இறால் போன்ற குறைவான பாதரசம் கொண்ட வகைகளை தோலையும் கொழுப்பையும் நீக்கிவிட்டுச் சமைத்து உண்பது பாதுகாப்பானது.

இரத்த உறைதலை தடுக்கும் அல்லது இரத்தத்தை மெலிக்கும் மருந்துகளை உட்கொள்பவர்கள் மீன் சாப்பிடுவதில் எச்சரிக்கை தேவை. மீனில் உள்ள ஒமேகா–3 கொழுப்பு அமிலங்கள் இரத்தப்போக்கு அபாயத்தை அதிகரிக்கக்கூடும். இதனால் சிறிய காயங்கள் ஏற்பட்டாலும் இரத்தம் உறைவதில் சிக்கல் ஏற்பட்டு அதிக இரத்தப்போக்கு உண்டாகலாம். இத்தகையவர்கள் மருத்துவரின் முறையான ஆலோசனைக்குப் பிறகே மீனை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மீனில் உள்ள 'பர்வல்புமின்' (Parvalbumin) என்ற புரதம் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது. இது சமைப்பதாலோ அல்லது வறுப்பதாலோ அழிந்துவிடாது. கடல் உணவு ஒவ்வாமை உள்ளவர்களுக்கு தோலில் அரிப்பு, வீக்கம் முதல் 'அனாபிலாக்ஸிஸ்' எனப்படும் உயிருக்கு ஆபத்தான நிலை வரை ஏற்படலாம். இவர்கள் ஒமேகா–3 சத்துக்களுக்காக மீனுக்குப் பதிலாக வால்நட்ஸ், ஆளி விதைகள் போன்ற தாவர உணவுகளை நாடுவது சிறந்தது.

நோய் எதிர்ப்பு திறன் குறைவாக உள்ளவர்கள் பச்சையாகவோ அல்லது அரைகுறையாக சமைக்கப்பட்ட மீன்களையோ சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். கடல் நீரில் இருக்கும் 'விப்ரியோ வல்னிஃபிகஸ்' போன்ற நச்சு பாக்டீரியாக்கள் மற்றும் ஒட்டுண்ணிகள் முறையாகச் சமைக்கப்படாத மீன்கள் மூலம் உடலில் நுழைந்து கடுமையான தொற்றுக்களை உண்டாக்கும். எனவே, மீனை எப்போதும் அதிக வெப்பநிலையில் நன்கு வேகவைத்து உண்பதே ஆரோக்கியமான முறையாகும்.

# சபரிமலையில் பெண்களை அனுமதிக்கும் உத்தரவை எதிர்த்து மறுஆய்வு மனுக்கள்: ஏப்.7 முதல் விசாரணை!

புதுடெல்லி, பிப். 17–

கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோயிலில் 10 வயது முதல் 50 வயது வரையிலான பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என்று கோரிஉச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், வயது வித்தியாசமின்றி அனைத்து பெண்களும் சென்று வழிபட அனுமதி அளித்து கடந்த 2018–ம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது.

இதை எதிர்த்து, மத்திய அரசு உள்ளிட்ட பல்வேறு தரப்புகளில் இருந்து 66 மறுஆய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜோய்மால்யா பக்சி அமர்வு முன்பு இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு வந்தன.




மறுஆய்வு மனுக்களைப் பரிசீலித்த நீதிபதிகள் பிறப்பித்துள்ள உத்தரவு விவரம்: சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் சென்று வழிபட அனுமதி அளித்து வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்த மறுஆய்வு மனுக்கள் மீதான விசாரணை 9 நீதிபதிகள் கொண்ட அரசியல்சாசன அமர்வு முன்பு ஏப்.7–ம் தேதி தொடங்க உள்ளது.

ஏப்.22–ல் விசாரணை முடிவடையும்: ஏப்.7, 8–ம் தேதிகளில் தீர்ப்பை எதிர்க்கும் தரப்பினரின் வாதங்களும், ஏப்ரல் 14, 16–ம் தேதிகளில் தீர்ப்புக்கு ஆதரவான மனுதாரர்களின் வாதங்களும் கேட்கப்படும். பின்னர் இரு தரப்பிலும் விளக்க வாதங்கள் ஏப்.21–ம் தேதி கேட்கப்பட்டு, 22–ம் தேதி விசாரணை நிறைவடையும். ஒருங்கிணைப்பு வழக்கறிஞர்களாக மறுஆய்வு மனுதாரர்கள் சார்பில் கிருஷ்ணகுமார் சிங்கும், மறுஆய்வு மனுக்களை எதிர்ப்போர் தரப்பில் ஷாஷ்வதி பரியும் நியமிக்கப்படுகின்றனர்.

மறுஆய்வு மனுக்கள் மீதான எழுத்துப்பூர்வ வாதங்களை மார்ச் 14–ம் தேதி தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு உதவ மூத்த வழக்கறிஞர்கள் கே.பரமேஷ்வர், சிவம் சிங் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு
### எஸ்.பி.ஐ. 2050 காலியிடங்கள்

Organization Name: State Bank of India
Notification No: CRPD/CBO/2025–26/18
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 2050 Circle Based Officer Posts
Place of Posting: All Over India
Starting Date: 29.01.2026
Last Date: 18.02.2026
Apply Mode: Online
Official Website: https://sbi.bank.in/



அஇஅதிமுக திருப்பூர் வடக்கு தொகுதி முட்டியங்கிணறில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித்தலைவி அம்மா மற்றும் புரட்சித்தமிழர் எடப்பாடியார் ஆகியோரது பிறந்தநாள் முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டு, பொதுமக்கள் 2 ஆயிரம் பேருக்கு ஹாட் பாக்ஸ், பிளாஸ்க் மற்றும் தட்டு ஆகியவற்றை நலத்திட்ட உதவியாக சட்டமன்ற உறுப்பினர்கள் பொள்ளாச்சி ஜெயராமன். எம் எஸ் எம் ஆனந்தன். கே எம் விஜயகுமார் ஆகியோர் வழங்கினர். மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளர் வேல்குமார் சாமிநாதன் முன்னிலை வகித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி, எதிர்க்கட்சி கொறடா கண்ணப்பன், கழக நிர்வாகிகள் அட்லஸ் லோகநாதன், சிவசாமி. எஸ்.பி.என்.பழனிசாமி, ஹரிஹரசுதன், நீதிராஜன் சாமிக்கண்ணு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# ரோப் கார் திட்டத்துக்காக கொடைக்கானலில் ஆய்வு செய்ய சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு!

கொடைக்கானல். பிப். 17–

கொடைக்கானல் வட்டக்கானல் முதல் கும்பக்கரை வரை ரோப் கார் அமைக்கும் திட்டத்துக்காக வனப்பகுதிக்குள் சென்று ஆய்வு நடத்த சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சுற்றுலாத்துறை மூலம் கொடைக்கானல் அருகேயுள்ள வட்டக்கானல் பகுதியில் இருந்து வெள்ள கெவி வழியாக, பெரியகுளம் அருகேயுள்ள கும்பக்கரை வரை 8.3 கி.மீ., தொலைவுக்கு ரோப் கார் திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டது.



இதற்காக, கடந்த ஜன. 9–ம் தேதி சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தை சேர்ந்த குழுவினர், வட்டக்கானல் பகுதியில் முதல்கட்ட ஆய்வு செய்தனர். இதைத் தொடர்ந்து, ரோப் கார் அமைய உள்ள பகுதி வனப்பகுதி வழியாக செல்வதால், 2–ம் கட்டமாக வட்டக்கானல் முதல் கும்பக்கரை வரையுள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் சென்று ஆய்வு நடத்த திட்டமிட்டுள்ளது.

இதற்காக வனத்துறையிடம் அனுமதி கோர சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்து அதற்கான பணிகளில் அந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறும்போது, ரோப் கார் அமைக்க திட்ட மிட்டுள்ள பகுதிகள் காப்புக் காட்டுக்குள் வருகிறது.

எனவே, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் எங்களிடம் அனுமதி பெறாமல் வனப் பகுதிக்குள் சென்று ஆய்வு நடத்த முடியாது.

அவர்கள் அனுமதி கோரினால், வனத்துறை ஒத்துழைப்புடன் வனப்பகுதிக்குள் சென்று ஆய்வு செய்யலாம். அதற்கு எந்த தடையும் இல்லை, என்றனர்.

# பள்ளி நூற்றாண்டு விழா & பரிசளிப்பு விழா!




ராமநாதபுரம், பிப். 17–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வள்ளல் சீதக்காதி சாலையில் அமைந்துள்ள சதக்கத்துன் ஜாரியா நடுநிலைப்பள்ளியின் நூற்றாண்டு விழா மற்றும் பரிசளிப்பு விழா பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பள்ளியின் தலைவர் ஷேக் உசைன் தலைமை வகித்தார். பள்ளியின் தாளாளர் பிலால் அப்துல்லா மற்றும் பொருளாளர் ஜமால் அஸ்ரப் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் இந்திரா காந்தி வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக வருவாய் கோட்டாட்சியர் ஹபீப் ரஹ்மான், முதன்மை கல்வி அலுவலர் ரெஜினி, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) இரவீந்திரன் மற்றும் முஹம்மது சதக் பொறியியல் கல்லூரி பேராசிரியர் அகமது உசேன் ஆசிப் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டி பேசினர். மேலும் முஹம்மது சதக் டிரஸ்ட் சார்ந்த தொழிலதிபர்கள் ஹாமிது இப்ராஹிம் மற்றும் சதக் அப்துல் காதர் கௌரவ அழைப்பாளர்களாக பங்கேற்றனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் (பொறுப்பு) அருட் செல்வி ஆண்டறிக்கையை வாசித்தார். தொடர்ந்து கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சாரப் போட்டிகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியாக நிர்வாக அதிகாரி சையது இப்ராஹிம் நன்றி கூறினார். நூற்றாண்டை எட்டிய இப்பள்ளி கல்வி மற்றும் ஒழுக்கநெறி வளர்ச்சியில் சிறப்பான பங்காற்றி வருவது விழாவில் குறிப்பிடப்பட்டது.




பழனியில் மாரியம்மன் திருவிழாவை முன்னிட்டு

# வணிகர் சங்க பேரமைப்பு சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது!

பழனி, பிப். 17–

பழனி மாரியம்மன் கோயிலில் மாசி திருவிழா நடைபெற்று வருகிறது. இதை முன்னிட்டு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பழனி மாவட்டம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கு மாவட்ட தலைவர் ஜே பி சரவணன் தலைமை வகித்து அன்னதானத்தை தொடங்கி வைத்தார். இதில் மாநில இணைச்செயலாளர் சரவண பொய்கை கந்த விலாஸ் அதிபர் என் பாஸ்கரன், மாவட்டச் செயலாளர் வள்ளுவர் தியேட்டர் என் செந்தில்குமார், மாவட்ட கௌரவத் தலைவர் கண்ணுசாமி, மாவட்ட செயலாளர் ஜெகதீஷ், காணியாளர் நரேந்திரன், துணைச் செயலாளர் பழனிச்சாமி, பிஆர்ஓ ராதாகிருஷ்ணன், எஸ் சஞ்சய் மணி, தேவா ரம்யா கிருஷ்ணன் உள்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்

## சினிமா துளிகள்..!



### "சேயோனாக" மிரட்டும் சிவகார்த்திகேயன்... SK26 ஃபர்ஸ்ட் லுக் !



கமல் ஹாசனின் ராஜ் கமல் ஃபிலிம்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் டர்மெரிக் மீடியா இணைந்து தயாரிக்கும் புதிய படத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் நடிக்கிறார். அமரன் திரைப்படத்திற்கு பிறகு சிவகார்த்திகேயன் மற்றும் கமல் ஹாசன் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது படத்திற்கான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியானது. அதன்படி இந்தப் படத்திற்கு "சேயோன்" என தலைப்பிடப்பட்டுள்ளது.

### ராஷ்மிகா மந்தனா-விஜய் தேவரகொண்டா திருமணம் எப்போது?



ராஷ்மிகா மந்தனா–விஜய் தேவரகொண்டா, இருவருக்கும் கடந்த வருடம் அக்டோபர் மாதம் நிச்சயதார்த்தம் நடைபெற்றது என சொல்லப்பட இப்போது அவர்களின் திருமணம் வரும் பிப்ரவரி 26ம் தேதி ராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூர் அரண்மயில் நடக்க இருப்பதாக ஒரு அறிவிப்பு சமூக வலைதளங்களில் வலம் வருகிறது.

# புதிய வகுப்பறை திறப்பு!




திருப்பூர், பிப். 17–

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், காளிபாளையம் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகு சட்டமன்ற நிதி, 26.65.

மாவட்ட ஊராட்சி நிதி 13.03.லட்சம் மொத்தம் ரூபாய் 39.68. லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு குழந்தைகளுக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்த விழாவில் மாவட்ட முன்னாள் கவுன்சிலர் திரு. வேல் குமார் சாமிநாதன், காளிபாளையம் ஊராட்சி முன்னாள் தலைவர் பொண்ணு லிங்கம், சுகன்யா வடிவேல், பேரவை துணை செயலாளர் சந்திரசேகர், நிர்வாகிகள் குமாரசாமி, பொன்னுசாமி, சுரேஷ், வீரப்பன், குப்புசாமி, தேவராஜ், செல்வம், காளியப்பன், சரவணகுமார், ஒப்பந்ததாரர் ஈகிள் ஐ இன்ப்ராஸ் டிரக்கர்ஸ்,சதிஸ்.ஆசிரியப் பெருமக்கள் மாணவச் செல்வங்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# பெரம்பலூர் அருகே லப்பைக்குடிக்காட்டில் 695 குடும்பங்களுக்கு வீட்டு மனை பட்டா அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர், பிப். 17–

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதி, லப்பைக்குடிகாடு பேரூராட்சி ஜமாலியா நகர் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலழச பட்டாக்களை வழங்கி வருகிறோம். இந்நிலையில் முதற்கட்டமாக 2025 பிப்ரவரி மாதத்தில் 108 பேருக்கும், இரண்டாம் கட்டமாக 2025 ஜூலை மாதத்தில் 310 பேருக்கும் பட்டா வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இன்று மூன்றாம் கட்டமாக 277 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். இதுவரை மொத்தம் 695 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டு, மக்கள் நீண்ட நாள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதி,லப்பைக்குடிகாடு பேரூராட்சி, ஜமாலியா நகரைச் சேர்ந்த இளைஞர்களின் கோரிக்கையை ஏற்று, அமைச்சர் சிவசங்கர் அறக்கட்டளை சார்பில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மிருணாளினி, முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர், அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# பிரதமர் மோடியை சந்திக்கிறார் பிரான்ஸ் அதிபர்: ரபேல் போர் விமானம் வாங்க ஒப்பந்தம் கையெழுத்தாக வாய்ப்பு!

புதுடில்லி, பிப். 17–

நம் நாட்டுக்கு வந்துள்ள பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், பிரதமர் நரேந்திர மோடியை மும்பையில் இன்று (பிப்ரவரி 17) சந்தித்து பேச்சு நடத்துகிறார். ஐரோப்பிய நாடான பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், மூன்று நாட்கள் அரசு முறை பயணமாக நம் நாட்டுக்கு வந்துள்ளார். இது அவரது நான்காவது இந்திய பயணம். இந்நிலையில், மஹாராஷ்டிராவின் மும்பையில் உள்ள லோக் பவனில், பிரதமர் மோடியை பிரான்ஸ் அதிபர் மேக்ரான் சந்திக்கிறார். அப்போது, பாதுகாப்பு, தொழில்நுட்பம், பொருளாதாரம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட உள்ளது. முக்கியமாக, பிரான்சிடம் இருந்து ரபேல் போர் விமானங்கள் வாங்கும் ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன. தொடர்ந்து, 'இந்தியா – பிரான்ஸ் இன்னோவேஷன் இயர் 2026' என்ற நிகழ்ச்சி யை, இரு தலைவர்களும் துவக்கி வைக்கின்றனர். 19ல், டில்லியில் நடக்கும் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டிலும் பிரான்ஸ் அதிபர் மேக்ரான் பங்கேற்கிறார்.




# ஏஐ உச்சி மாநாட்டை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி!




புதுடெல்லி, பிப். 17–

டெல்லியில் பிரம்மாண்ட செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உச்சி மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கிவைத்தார்.

டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் 5 நாள் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். பாரத் மண்டபத்தில் 600–க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளன. இதில் முக்கிய அரங்குகளை பிரதமர் மோடி பார்வையிட்டார். பல்வேறு நிறுவனங்களின் ஏஐ நிபுணர்களுடன் அவர் கலந்துரையாடினார்.



சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு அரசின் 2026–2027ஆம் ஆண்டிற்கான இடைக்கால வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சந்தித்து வாழ்த்துப் பெற்று, பேரவைக்குள் சென்றார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு அரசின் 2026–2027ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்துப் பெற்று, பேரவைக்குள் சென்றார். உடன் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த. உதயச்சந்திரன் உள்ளார்.

# ஈரானுடன் மறைமுக பேச்சுவார்த்தை: அமெரிக்க அதிபர் டிரம்ப் தகவல்!



வாஷிங்டன், பிப். 17–

ஈரானுடன் பேச்சுவார்த்தையில் மறைமுகமாக ஈடுபடுவேன் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா மற்றும் மேற்காசிய நாடான ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடிக்கிறது. ஈரானை எப்படியாவது ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைக்க வேண்டும் என அமெரிக்கா பல்வேறு எச்சரிக்கைகளையும், அழுத்தங்களையும் கொடுத்து வருகிறது. மேற்காசியாவில் போரை தவிர்க்க இரு நாடுகளும் பேச்சு நடத்தவேண்டும் என அரபு நாடுகள் கோரிக்கை விடுத்தன. இதையடுத்து அணுசக்தி தொடர்பாக இரு நாட்டு அதிகாரிகளும் சந்தித்து பேச்சு நடத்தி வருகின்றனர்; ஆனால் இன்னும் உடன்பாடு எட்டப்படவில்லை. இந்நிலையில் நிருபர்களி டம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: ஜெனீவாவில் அணுசக்தி ஒப்பநதம் தொடர்பாக ஈரானுக்கும், அமெரிக்காவிற்கும் இடையில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் மறைமுகமாக ஈடுபடுவேன். ஈரான் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த விரும்புவதாக நான் நம்புகிறேன். பேச்சுவார்த்தை மிக முக்கியமானதாக இருக்கும். ஈரான் நீண்ட காலமாக பேச்சுவார்த்தைகளில் கடுமையான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகிறது.

கடந்தாண்டு அமெரிக்கா ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது குண்டுவீசியபோது அந்த அணுகுமுறையின் விளைவுகளைக் கற்றுக்கொண்டேன். இந்த முறை பேச்சுவார்த்தையில் ஒரு ஒப்பந்தம் செய்யாவிட்டால் அதன் விளைவுகளை அவர்கள் அறிவார்கள். ஈரானின் அணுசக்தி திறனை அழிக்க B–2 ரக விமானங்களை அனுப்புவதற்குப் பதிலாக நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

# வங்கதேச இடைக்கால தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் முகமது யூனுஸ்..பிரதமராகிறார் தாரிக் ரஹ்மான்!



வங்கதேசம், பிப். 17–

வங்கதே சத்தில் நிலவி வந்த இடைக்கால ஆட்சி முடிவுக்கு வந்துள்ள நிலையில், அந்நாட்டின் இடைக்காலத் தலைவர் முஹம்மது யூனுஸ் தனது பதவியை நேற்று அதிகாரப்பூர்வமாக ராஜினாமா செய்தார்.

தொடர்ந்து தாரிக் ரஹ்மான் புதிய பிரதமராக இன்று பொறுப்பேற்கிறார். முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகனான தாரிக் ரஹ்மான் கடந்த 17 ஆண்டுகளாக லண்டனில் வசித்து வந்தார். கடந்த டிசம்பரில் தாய் கலீதாவின் மரணத்தின் பின் அவர் நாடு திரும்பினார். கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற 3 மாதத்தில் மாபெரும் வெற்றி பெற்று வங்கதேச பிரதமர் ஆகிறார். சுமார் 32 முதல் 42 பேரை கொண்ட அமைச்சரவையை தாரிக் ரஹ்மான் அமைக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இன்று அவரின் பதவியேற்பு விழாவில் பல்வேறு நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். இந்தியா சார்பில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா கலந்து கொள்கிறார். இதற்கிடையே தொலைக்காட்சியில் உரையாற்றிய யூனுஸ், "இன்று இடைக்கால அரசு விலகுகிறது. ஆனால், நாம் தொடங்கியுள்ள ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

# மதுரையில் 21ம் தேதி திறந்து வைக்கப்பட உள்ள மேம்பாலத்திற்கு நேதாஜி பெயர்; முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!




சென்னை, பிப். 17–

மதுரை தமுக்கம் மைதானத்தில் இருந்து நெல்பேட்டை அண்ணா சிலை வரை 1.3 கிலோமீட்டர் நீளத்திற்கு மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. 213 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது.

இந்த மேம்பாலத்தை வரும் 21ம் தேதி முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று திறந்து வைக்க உள்ளார்.

இந்நிலையில், மதுரையில் 21ம் தேதி திறந்து வைக்கப்பட உள்ள மேம்பாலத்திற்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பெயர் சூட்டப்படுவதாக முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

நீண்ட பாலங்களை அமைத்துச் சாதனை படைத்துவரும் நமது திராவிட மாடலில், அடுத்து மதுரையில் அமைகிறது 1.3 கிலோமீட்டர் நீளமுள்ள "தேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலம்"!

தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு, இந்திய நாட்டின் விடுதலைக்காகத் தனக்கெனப் பாதையை உருவாக்கி, நம் தென்மாவட்ட மக்களை விடுதலைப் போரில் ஈடுபடுத்திய வீரத்தின் அடையாளமான #Netaji–SubashChandraBose அவர்களின் பெயரைச் சூட்டிப் பெருமிதம் கொள்கிறேன். ரூ.213 கோடியில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலத்தை வரும் 21–ஆம் நாள் என்னுடைய மதுரைப் பயணத்தில் திறந்து வைக்கிறேன். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஜல்லிக்கட்டு போட்டியினை துவக்கி வைத்த மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார்!

நாமக்கல், பிப். 17–

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியம் தாண்டாகவுண்டம்பாளையத்தில் நடைபெற்ற தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியினை மாநிலங்களவை உறுப்பினரும் , நாமக்கல் திமுக கிழக்கு மாவட்ட செயலாளருமான கே ஆர் என் ராஜேஷ்குமார் துவக்கி வைத்து அரசின் ஜல்லிக்கட்டு விதிகளுக்கு உட்பட்டு பங்கேற்க உறுதி மொழியை வாசித்தார் .

தொடர்ந்து ஜல்லிக்கட்டு போட்டியினை கண்டுகளித்த மாநிலங்கள் உறுப்பினர் வெற்றி பெற்ற காளைகள் மற்றும் வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார் . இந்தப் போட்டியில் 700 காளைகளும் 350 மாடுபிடி வீரர்களும் பங்கேற்ற நிலையில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் பாலச்சந்திரன், மாநில அயலக அணி துணைச் செயலாளர் முத்துவேல் இராமசுவாமி, முன்னிலை வகிக்க அரசு துறை அதிகாரிகள் மேற்பார்வையில் ஜல்லிகட்டு வீரர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



சென்னை மந்தைவெளி கிழக்கு வெளி வட்ட சாலைக்கு இசை கலைஞர் பத்மஸ்ரீ சீர்காழி கோவிந்தராஜன் பெயரை தாங்கிய பெயர் பலகையை தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வருகிற பிப்ரவரி 17இல் (புதன்கிழமை) காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

## டிஎன்பிஎஸ்சி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக ஸ்ரீ வெங்கடபிரியா ஐ.ஏ.எஸ். பொறுப்பேற்பு!


சென்னை, பிப். 17–

டி.என்.பி.எஸ்.சி.யில் புதிய தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக ஸ்ரீ வெங்கடபிரியா ஐ.ஏ.எஸ். பொறுப்பேற்றுள்ளார். குரூப்–2, 2ஏ தேர்வு குளறுபடி காரணமாக தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் மாற்றப்பட்ட நிலையில் கடந்த 14–ம் தேதி வெங்கடபிரியா பொறுப்பேற்றதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

# டில்லி தமிழ் கல்வி கழகத்தின் நிர்வாக குழு அதிரடி நீக்கம்!

புதுடெல்லி, பிப். 17–

டில்லி தமிழ் கல்வி கழகத்தில் ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் , நிர்வாகக் குழு நீக்கப்பட்டு , புதிதாக இடைக்கால குழு அமைக்கப்பட்டு உள்ளது.




தலைநகர் டில்லியில் நூற்றாண்டு கண்ட டில்லி தமிழ் கல்வி கழகம் செயல்படுகிறது . இந்த கழகத்துக்கு , டில்லி அரசு தொண்ணூற்றைந்து சதவீதம் மானியம் அளிக்கிறது.

இதன் நிர்வாகத்தில் பல்வேறு குளறுபடிகள் நடந்ததாக , டில்லி அரசுக்கு தொடர்ச்சியாக புகார்கள் வந்த வண்ணம் இருந்தன . போலி ஆவணங்கள் மூலம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து , போலி ஆவணங்கள் மூலம் நியமிக்கப்பட்ட ஏழு ஆசிரியர்களை பணிநீக்கம் செய்து , டில்லி துணைநிலை கவர்னர் வினய் குமார் சக்சேனா கடந்தாண்டு உத்தரவிட்டார்

ஊழல் தொடர்பாக , மாநில கல்வி இயக்ககம் அளித்த புகாரை தொடர்ந்து , விசாரணை நடத்திய சி . பி . ஐ . , டில்லி கல்வி கழகத்தின் செயலர் ராஜு உள்ளிட்ட ஒன்பது பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து விசாரிக்கிறது

இதற்கிடையே , இந்த நிறுவனத்தில் முறைகேடுகள் நடந்திருப்பதாகக் கூறி , இங்கு பணிபுரியும் , நுாற்று நான்கு ஆசிரியர்களுக்கு மானியம் வழங்குவதை டில்லி அரசு நிறுத்தி வைத்துள்ளது . இது தொடர்பான வழக்கு , டில்லி உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது

இந்த சூழலில் , முறைகேடுகளுக்கு காரணமான நிர்வாகக் குழுவை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது . இது தொடர்பாக , கடந்தாண்டு ஜூலையில் கல்வி கழக நிர்வாகத்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது

புதிய உறுப்பினர்களை நியமிக்க சிறப்பு செயற்குழு கூட்டப்படாத நிலையில் , இருநூறுக்கும் மேற்பட்ட பெற்றோர் ஒன்றிணைந்து சிறப்பு பொதுக்கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தினர் . இதில் , தலைவர் ஆர் . கே . ராமன் , செயலர் ஆர் . ராஜு உள்ளிட்டோர் அடங்கிய நிர்வாகக் குழுவை உடனடியாக நீக்குவதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

. தேர்வு . தொடர்ந்து , பள்ளிகளின் நிர்வாகத்தை கவனிக்க இடைக்கால குழுவை அமைக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி , தலைவராக கண்ணையாவும் , ஓய்வு பெற்ற மத்திய அரசு விஞ்ஞானி அருண் குமார் செயலராகவும் , சத்யன் , மணி , ரஜினிகாந்த் ஆகியோர் உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டனர்

புதிதாக தேர்தல் நடந்து நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படும் வரை , டில்லி தமிழ் கல்வி கழகத்தின் நிர்வாகத்தை இடைக்கால குழு கவனிக்கும்.

## பல முக்கிய அம்சங்களுடன் தயார்...

# 27-ந்தேதி வெளியாகும் த.வெ.க. தேர்தல் அறிக்கை?



சென்னை, பிப். 17–

த.வெ.க. தேர்தல் அறிக்கை பொதுமக்கள் விரும்பும் வகையில் பல முக்கிய அம்சங்களுடன் வருகிற 27–ந்தேதி வெளியாக இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தேர்தல் அறிக்கையை மக்கள் மத்தியில் வெளியிடுவதா? அல்லது கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் வெளியிடுவதா? என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, பொள்ளாச்சி, வேலூரில் அடுத்தடுத்து மக்கள் சந்திப்பு கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்காக போலீஸ் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக த.வெ.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.


# தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020